# இயல் - 1 முன்னுரை

## முன்னுரை

தற்கால இலக்கியங்களாகிய சிறுகதை, நாவல், நாடகம், புதுக்கவிதை ஆகியவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டு அவை உணர்த்தும் செய்திகளை வெளிப்படுத்தும் ஆய்வுகள் பெருகி வருகின்றன.

நாவல் இலக்கியம் குறிப்பிடத்தக்க விதத்தில் நன்கு வளர்ச்சியடைந்து 120 ஆண்டுகளைக் கடந்து, செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆரம்ப காலத்தில் காப்பியங்கள் பெற்றிருந்த இடத்தை இன்று நாவல்கள் பெற்றுள்ளன எனலாம். காப்பியங்கள் தன்னேரில்லாத் தலைவன் - தலைவியைக் காட்ட, நாவல்களோ மனிதனை அவனது நிறை, குறைகளோடு காட்டின; வளர்ந்தன. தனக்கென்று ஓர் இடத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெற்றுக்கொண்டன. நாவல்கள் சமுதாய நிகழ்வுகளை, போக்குகளை, வெளிப்படுத்தும் ஓர் அரிய சாதனமாக விளங்குகின்றன.

### ஆய்வுப் பொருள்

"விட்டல்ராவ் நாவல்களில் வாழ்வியல் சிக்கல்களும் படைப்பாக்க நெறிமுறைகளும் - ஓர் ஆய்வு" என்பது இவ்வாய்வுக்கு எடுத்துக் கொண்ட தலைப்பாகும். அவர் எழுதியுள்ள பத்து நாவல்கள் சிறப்பாக ஆராயப் படுகின்றன. அவரின் சிறுகதைகள், குறுநாவல்கள், கட்டுரைகள் பற்றிய பொது அறிமுகமும் இவ்வாய்வில் இடம்பெறுகின்றது. அவரது நாவல்களை ஆராயும் முதல் ஆய்வாகவும் இவ்வாய்வு அமைகிறது.

## ஆய்வு மூலம்

விட்டல்ராவின் நாவல்கள் ஆய்வின் முதன்மைச் சான்று ஆதாரங்களாகின்றன. விட்டல்ராவின் படைப்புக்களைப் பற்றி வெளிவந்துள்ள திறனாய்வுக் கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் நாவல்கள் பற்றிய திறனாய்வு நூல்கள், சமூகம், உளவியல் பற்றிய பல்வேறு ஆய்வு நூல்களும் துணைமைச் சான்று ஆதாரங்களாகின்றன.

## ஆய்வு நெறி

இவ்வாய்வு பகுப்பாய்வுமுறை ( Analytical method ) உளவியல் முறை ( Psychological method ) விளக்கமுறை ( Descriptive method ) வரலாற்றுமுறை ( Historical method ) அமைப்பியல்முறை ( Structural method ) ஆகிய முறைகளில் அணுகப்பட்டுள்ளது.

பகுப்பாய்வு, வரலாற்றுமுறை, விளக்கமுறையைக் கொண்டு நாவல்களில், உள்ளடக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைப்பியல்முறை, உளவியல்முறையைப் பின்பற்றி நாவல்களில் பாத்திரப் படைப்புக்கள், படைப்பாக்க நெறிமுறைகள் ஆராயப்பட்டுள்ளன.

## ஆய்வின் நோக்கம்

விட்டல்ராவின் நாவல்களில் காணப்படும் சமுதாயக் கூறுகள், மனித வாழ்வின் பல்வகைச் சிக்கல்களை எடுத்துக்காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. மேலும் விட்டல்ராவின் படைப்பாக்கத் திறனைக் காண்பதும் நோக்கமாக அமைகிறது. இவருடைய சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்களில் சமகாலச் சமுதாய நிகழ்வுகளும், சமூக மாற்றங்களும் இடம்பெற்றுள்ள முறையையும் இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

## ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வேடு பின்வரும் இயல்களைக் கொண்டு அமைகிறது.

1. முன்னுரை
2. விட்டல்ராவின் படைப்புக்கள் - ஓர் அறிமுகம்
3. விட்டல்ராவின் நாவல்களில் வாழ்வியல் சிக்கல்கள்
4. விட்டல்ராவ் நாவல்களில் கதைமாந்தர்கள்
5. விட்டல்ராவ் நாவல்களில் படைப்பாக்க நெறிமுறைகள்
6. முடிவுரை

'விட்டல்ராவின் படைப்புக்கள் - ஓர் அறிமுகம்' என்னும் இயலில் விட்டல்ராவ் படைப்புக்கள் பற்றிய பொது அறிமுகம் இடம்பெறுகிறது. விட்டல்ராவ் எழுத்துத் துறைக்கு வந்த ஆண்டு, அவரது முதல்படைப்பு, அதனைத் தொடர்ந்து அவர் எழுதிய சிறுகதைகள், குறுநாவல்கள், கட்டுரைகள், நாவல்கள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. அவர் எழுதியுள்ள பத்து நாவல்கள், குறுநாவல்கள், இரண்டு சிறுகதைத் தொகுதிகள் மற்றும் 'ஓவியக்கலை உலகில்' என்ற ஓவியநூல் பற்றிய செய்திகள் இந்த இயலில் தரப்பட்டுள்ளன. ஆய்வாளர் விட்டல்ராவை பேட்டி கண்டபோது கூறியுள்ள செய்திகளும் சான்றாகத் தந்து விளக்கப்பட்டுள்ளன.

'விட்டல்ராவ் நாவல்களில் வாழ்வியற் சிக்கல்கள்' என்னும் இயலில் மனிதன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல்வகைச் சிக்கல்களும் அவர் நாவல்வழி விளக்கப்படுகின்றன. தனிமனிதன் எதிர்கொள்ளும் குடும்பச் சிக்கல்கள், சமுதாயச் சிக்கல்கள், தொழில் மற்றும் கலைத்துறையில் எதிர்கொள்ளும் சிக்கல்கள், பண்பாட்டுச் சிக்கல்கள், அவற்றிற்கான காரணங்கள், தீர்வுகள் ஆராயப்பட்டுள்ளன. மனிதனின் வாழ்க்கையில் இச்சிக்கல்கள் எந்த அளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதும் ஆராய்ந்த முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

'விட்டல்ராவ் நாவல்களில் கதைமாந்தர்கள்' என்ற இயல் அவரது நாவல்களில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களைப் பற்றிய ஆய்வாக அமைகிறது. கதைமாந்தர்கள் இன்றைய சமுதாயத்தில் ரத்தமும் சதையுமாக இயங்கி வரும் உண்மை மாந்தர்களின் பிரதிநிதியாக இயங்குவதை இவரது நாவல்களில் காண முடிகிறது. ஆண்மாந்தராயினும், பெண்மாந்தராயினும் அவர்களின் நிறைகுறை பண்புகளுடன் படைக்கப்பட்டிருப்பதை இவ்வியல் ஆராய்ந்து எடுத்துக் கூறுகிறது.

'விட்டல்ராவ் நாவல்களில் படைப்பாக்க நெறிமுறைகள்' என்ற இயல் அவரது நாவல்களின் அமைப்புமுறை, அவர் கையாளும் உத்திகள் ஆகியவற்றை ஆராய்ந்துள்ளது. அவரது நாவல்களில் தலைப்பு, தொடக்கமும் முடிவும், பின்னோக்கு உத்தி, நனவோடை உத்தி, பின்னணியைக் கையாளும் சிறப்பு, உரையாடல், நடை போன்ற பல்வேறு கூறுகளும் அவரது நாவல்களிலிருந்து சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

'முடிவுரை' என்ற இயலில் இதுவரை ஆய்வில் கண்டறியப்பட்ட ஆய்வு முடிவுகள் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. அதன்பின் துணைநூற்பட்டியல் இடம் பெற்றுள்ளது.

பின்னிணைப்பில் 'தமிழ் நாவல்-போக்குகள்' என்ற ஆய்வுக் கட்டுரை இடம் பெற்றுள்ளது. விட்டல்ராவை, ஆய்வாளர் நேரில் சந்தித்து, அவருடன் தங்கி நாவல்களைப் பற்றி விவாதித்த விரிவான பேட்டியும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. மேலும் ஆய்வாளருக்கு விட்டல்ராவ் எழுதிய முக்கியக் கடிதங்களின் நகலும் சான்றாக இணைக்கப்பட்டுள்ளது.